## DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure )

## IN THE COURT OF THE ADDITIONAL SUBORDINATE COURT, HOSUR

| | | |
|---|---|---|
| S.C. Case No | | : 48/2020 |
| Deposition of witness for | Prosecution | : Pw 2 |
| | Defence | : |

Name : Meiyappan @chandru
Father's Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed and on date 02.11.2021 in accordance with the provision with the Act of 1983.

முதல் விசாரணை :

நான் ஒசூர் எழில் நகர் பேகுபள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் எனது அப்பாவின் கம்பெனியை பார்த்து வருகிறேன். அ.சா.1 சண்முகம் எனதுஅப்பா. ஆஜர் ்எதிரியை எனக்கு தெரியும்.அவர் எனது வீட்டிற்கு பின்புறம் வசிக்கிறார். 05.10.2019 அன்று 5வதுகிராசில் உள்ள சந்தியா இஞ்சினியரிங் கம்பெனிக்கு நான், என்அம்மா, அப்பா மற்றும் கம்பெனியில் வேலை செய்யும் 2 பேர் மற்றும் எனது சித்தப்பா கல்யாண குமார் ஆகியோர் காலை 8.30 மணிக்கு கம்பெனிக்கு சென்றோம். கம்பெனியில் வேலை பார்க்கும் நாகா என்பவர் வாழை மரங்களை வெட்டிக்கொண்டிருந்தார். அதை ஸ்ரீதர் என்பவர் வாங்கி வைத்துக்கொண்டிருந்தார். எதிரி வெட்டி வைத்திருந்த வாழை மரங்கள் மீது எச்சில் உமிழ்ந்தார். அதை பார்த்து விட்டு என் அம்மா பூஜைக்கு வைத்திருக்கும் வாழை மரங்கள்மீது எச்சில் உமிழ்ந்தது சரியா என்று எதிரியை கேட்டார்.அதற்கு எதிரி அப்படி தான் பேசுவேன் அப்படி தான் துப்புவேண் என்று சொல்லி தேவடியா,கண்டார ஓளி என்று கெட்ட வார்த்தைகளால் எனது அம்மாவை திட்டினார்.அது பற்றி அருகில்நின்றிருந்த எனது அப்பா எதிரியை கேட்டார். இன்றோடு உன்னை என்ன செய்கிறேன் பார் என்று எதிரி வீட்டிற்குள் சென்றார். அம்மா பூஜைக்கு வைத்திருந்த வாழை செடிகள் மீது எச்சிசல் உமிழ்ந்து விட்டார்.வேறு செடிகளை வாங்கி கொள்ளலாம் என்று அங்கிருந்து செல்ல

முயற்சி செய்தும் அப்பொழுது எதிரி வீட்டிற்குள் இருந்து கத்தி எடுத்துக்கொண்டு வேகமாக ஓடிவந்தார்.நான் அதை பார்த்து எதிரியை தடுக்கப்போனேன். எதிரி இத்துடன் தொலைந்து போ என்று எனது அப்பாவின்கழுத்தை வெட்ட முயன்றார் அதை நான் தடுத்தேன். அதில் எனது இடது பெருவிரலில் வெட்டுக்காயம் ஏற்பட்டது.அதன்பிறகு எதிரி என் அப்பாவின் கழுத்தின்பின்புறம் வெட்டினார். என் சித்தப்பா அங்கு தான்இருந்தார்.அவர் வந்தார். அப்பொழுது எதிரி உங்கள் அனைவரையும் கொல்லாமல் விடமாட்டேன் என்று கத்தியை போட்டு விட்டு சென்றுவிட்டார்.நான்தடுக்கவில்லை என்றால் எதிரி எனதுஅப்பாவின் முழு கழுத்தையும் வெட்டியிருப்பார்.அங்கிருந்த எனது அம்மாவும் மற்றவர்கள் கத்தியதில் எதிரி ஓடி விட்டார். நாங்கள் சிறியதாக ஒரு வீடுகட்டியிருந்தோம். 5 வருடம் கழித்து எதிரி வீடு கட்டினார். அப்பொழுது எதிரி கொஞ்ச இடத்தை சேர்த்துவிடு கட்டியிருந்தார்.அது எங்களுக்கு தெரியவில்லை.நாங்கள் எங்கள் வீட்டை விரிவு படுத்திய போது அதை பார்த்து கேட்டோம். அது தொர்பாக எதிரி எங்களுடன் சண்டை போட்டுக்கொண்டிருந்தார். பக்கத்திலேயே இடம் வாங்கிகம்பெனி கட்டினோம். அதில் சத்தம் அதிகமாக வருகிறது என்று பசுதை தீர்ப்பாயத்தில் எதிரி வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த வழக்கில் 2 ஆண்டு கழித்து என் தாய்க்கு சாதகமாக தீர்ப்பு வந்தது. சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக கம்பெனியில் கோழிக்கூடு அமைத்திருந்தேன்.அதை மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகளை அழைத்து வந்து காண்பித்து பிரச்சனை செய்தார். பசுமை தீர்ப்பாயத்தில் வழக்கு நடைபெற்றதில் இருந்து நாங்கள் அங்கு கம்பெனி நடத்துவதில்லை. கம்பெனியில கார் நிறுத்தும் இடமாகவும்,வீட்டில் உள்ளபொருட்களை அடைத்து வைக்கும் இடமாகவும் நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். அதனால் அடிக்கடி அந்த இடத்திற்கு நாங்கள் போக வேண்டியிருந்தது.அப்பொழுது எனதுஅப்பாவை பார்த்து எதிரி மிரட்டியும்,முறைத்தும் இருந்தார்.ஒரு நாள் எதிரி குடித்துவிட்டு வந்து எனது அப்பாவிடம் சண்டை போட்டார்.உன்னை கொல்லாமல் விடமாட்டேன்.இடத்தை விட்டு காலி செய்யாமல் விடமாட்டேன் என்று சொன்னர்.காயம் பட்டவுடன் நாங்கள் ஒசூர் மருத்துவமனைக்கு சிகிச்சை சென்றோம். அதன்பிறகு குணம் மருத்துவமனை சென்ற மேற்கொண்டு சிகிச்சை பெற்றோம். அங்கு போலிசார் வந்தார்கள்.எங்களை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். எனக்கு கையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு 10 நாள் கழித்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய கத்தி நீதிமன்றத்தில் உள்ள சா.போ.1. தான்.

குறுக்கு விசாரணை:

போலிசார் என்னை 2 முறை விசாரித்து வாக்குமூலம் எழுதினார்கள். போலிசார் என்னை விசாரித்தபோது சம்பவத்திற்கு முன்பு நடைபெற்றதாக நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சம்பவங்களை சொல்லவில்லை. சுமார் 4,5 வாழை மரங்களை வெட்டினோம்.அதற்கு சமையல் பயன்படுத்தும் கத்தியை பயன்படுத்தினோம். வாழை மரங்கள் சின்ன செடிகளாக தான் இருந்தது. எங்கள் கம்பெனியில் நாங்கள் இருந்தோம். எதிரி அவரது வீட்டுகாம்பவுண்டுக்குள் நின்று வெட்டப்பட்ட வாழை மரங்கள் மீது எச்சில் உமிழ்ந்தார். அங்கு நின்று தான் எங்களை திட்டினார். எதிரி எங்களை வெட்ட வந்தது எங்கள் கம்பெனி கேட்டுக்கு முன்புறம். ஒருஅடி அளவு நீளத்திற்கு

சா.போ.1ல் உள்ள ரத்த காயம் அளவு எங்களுக்கு காயம் ஏற்படவில்லை. எனது இடது கை பெருவிரலை சரியாக பயன்படுத்த முடியாது. எனக்கு வலது கை பழக்கம் தான் உள்ளது. பொதுவாக நான் வலதுகையை தான் பயன்படுத்துவேன் என்று சொன்னால் அத சமயத்தை பொறுத்தது. கேட்டுக்கு அருகில் வேப்ப மரம் உள்ளது என்று சொன்னால் அது அந்த பக்கமாக உள்ளது.. காயம் பட்டவுடன் நான் மயங்கவில்லை.நினைவிருந்தது. மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள இடத்தில் வைத்து தான் சம்பவம் நடைபெற்றது. சம்பவ இடத்தில் எங்கள் தரப்பில் 4 பேர் இருந்தோம். எதிரி மட்டும் தான்இருந்தார். சா.போ.1ஆல் ஓங்கிவெட்டியிருந்தால் எனது கையும் எனது அப்பாவின் கழுத்தும் துண்டாகியிருக்கும் என்று சொன்னல் சரிதான். சா.போ.1ல் ரத்தக்களை எவ்வாறு ஏற்பட்டது என்று எனக்குத் தெரியாது. இதற்குமுன்பு எதிரி நேரடியாக வந்து எந்த தொந்தரவும் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். 3அ றிவிப்புஅனுப்பியுள்ளார்.குடித்து விட்டு வந்து திட்டியுள்ளார். இந்த வழக்கை தவிர எதிரி மீது வேறு புகார்காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.அவர் தான் எங்கள் மீது கொடுத்துள்ளார்.எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரி கத்தியை சம்பவ இடத்தில் போடடுவிட்டார். எதிரியை அவரதுமகன் அழைத்து சென்றுவிட்டார். எதிரி சம்பவதின் போது பயன்படுத்திய கத்தி சா.போ.1 தான். சா.போ.1 போலிசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினார் என்பது மட்டும் தெரியும். 05.10.19 அன்று காலை 12.30 மணிக்கு போலிசார் சா.போ1 ஐ கைப்பற்றியதாக சொன்னார்கள். நான் சொன்னதுபோல் சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் எனதுகம்பெனிக்கு முன்புள்ள வேப்ப மரத்தின் கிளைகளை வெட்டிக்கொண்டிருந்தேன் என்றும் அப்பொழுது தவறுதலாக எனது கையை வெட்டிக்கொண்டேன் என்றும் அந்த கத்தி கீழே விழந்ததில்அங்கு நின்று கொண்டிருந்த எனதுஅப்பவின்கழுத்தில் பட்டு எனதுஅப்பாவிற்கு காயம் ஏற்பட்டது என்றும் அந்த காயங்களை பயன்படுத்தி பொய் புகார்கொடுத்து எதிரியை அடக்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு ஏற்பட்ட சாதாரண காயங்களுக்கு செல்வாக்கை பயன்படுத்திெ காடுங்காயங்கள் என்று சான்றிதழ் வாங்கியுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. சா.போ. 1 இந்த வழக்கிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனதுஅப்பாவிற்து ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.சா.போ.1 கொடுவாள். கொடுவாளுக்கும் ,கத்திக்கும் உள்ளவித்தியாசம் தெரியும். நான் மருத்துவரிடம் என்னை தெரிந்த நபர் கத்தியால் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என் று சொன்னால் கொடுவாள் கத்தி என்று தான் சொன்னேன். நான் பயன்படுத்திய கத்தியால் எனக்கும் என் அப்பாவிற்கும் காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.